1992 பிப்ரவரி 4] • [கி. தர்மலிங்கம்]

அறிக்கையில் (சிவில்) வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறை தொடர்பான பத்திகள் மீதான குழுவின் இருபத்திநான்காவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

5. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்ட முன் வடிவுகள்—அறிமுகம் செய்தல். 1992 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சி யமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சர் அனுமதி கோருவார்.

***மாண்புமிகு திரு. இராம வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப்பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

[1992 பிப்ரவரி 4

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சார்ந்த சட்டங்களின் (திருத்த) சட்ட முன்வடிவு 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சார்ந்த சட்டங்களின் (திருத்த) சட்ட முன் வடிவு இதனைப் பேரவை முன் அறிமுகம் செய்ய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சார்ந்த சட்டங்களின் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.